திரு. சைதை சா. துரைசாமி: தலைவர் அவர்களே, கைத்தறி வார கண்காட்சியில் விற்பனைக்கென்று தற்காலிகப் பணியாளர்களை நியமிக்கிறார்கள். அந்தப் பணிக்கு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட வேண்டும்.

தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரி.

715—(*வினா எண். 7312) திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தீப்பெட்டித் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. ஆர். ரெங்கசாமி: தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலுக்கு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் சேல்ஸ் டாக்சிலிருந்து விலக்கு கொடுத்தார்கள். அது முக்கியமான குடிசைத் தொழிலாகும் என்பதுதான் காரணம். ஆகவே அரசாங்கம் பரிசீலனை செய்து தீப்பெட்டித் தொழிலுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது பெருந்தலைவர் காமராசர் காலத்தில் என்று சொன்னார்கள். அதுவல்ல, பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது 1-4-1966 முதல் 4-9-1979 வரையில் தீப்பெட்டித் தொழிலுக்கு 13 ஆண்டுகள் வரிவிலக்கு செய்யப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 4-3-1982 முதல் இரண்டு விழுக்காடு ஒருமுனை வரி விதிக்கப்படுகிறது. முன்பு பலமுனை வரி விதிக்கப்பட்டது.

1986 மே 8]

அப்போது 10 ஆயிரத்திற்குள்ளே டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. இப்போது 50 ஆயிரம் வரையில் டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே அப்படி வரி விலக்கு அளிக்கிற உத்தேசம் அரசுக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, அப்படி வரிவிலக்கு அளிக்க இயலாமல் போனால் எக்சைஸ் டியூட்டியை உயர்த்தி விட்டு இந்த வரியை எடுத்துவிடலாம். அது கன்வினியன்டாக இருக்கும். அப்படி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, எக்சைஸ் டியூட்டி போடுகிற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் 4 விழுக்காடு வரி விதிக்கலாம். அப்படி சட்டமிருந்தாலும் கூட சலுகை முறையில் இரண்டு விழுக்காடு வரி விதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தீப்பெட்டித் தொழிலை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை.

716—(* வினா எண் 6421)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அருகே உள்ள மறைமலை நகரில் பிளாஸ்டிக் தொழிற்பேட்டை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் இது தொடங்கப்படும் ?

(இ) இதன் மூலம் வேலை வாய்ப்பு பெறுவோரின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ்வினாக்களுக்கு இடம் இல்லை.